**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 28 ஜுன் 2017

Good Food, Good Life

**Ran Ratha Wasana அதிர்ஷ்டசாலி வெற்றியாளருக்கு நெஸ்டமோல்ற்றின் பரிசான மூன்றாவது கார்**

*இன்னும் இரு கார்களுக்கான வெற்றி வாய்ப்புக்கள்*

ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையின் முன்னணி பான வகை வர்த்தகநாமமாகத் திகழ்ந்து வருகின்ற நெஸ்டமோல்ற்று, தனது Ran Ratha Wasana அதிர்ஷ்டச் சீட்டிழுப்பின் மூன்றாவது அதிர்ஷ்டசாலி வெற்றியாளரின் விபரங்களை அறிவித்துள்ளது. ஹங்குராகெத்தை, மாடவெல என்ற இடத்தைச் சேர்ந்த பி.டபிள்யூ.சீ.கே. ஜெயசேகர அவர்களே மூன்றாவது வெற்றியாளர். இந்த ஊக்குவிப்புப் பிரச்சாரத்திற்கு ஏற்கனவே 200,000 இற்கும் மேற்பட்ட நுழைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றிலிருந்து ஐந்து அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் புத்தம்புதிய Kia Picanto மோட்டார் கார்களை வெல்லவுள்ளனர்.

இந்த ஊக்குவிப்பின் மூலமாக இன்னமும் இரு கார்களை மாபெரும் பரிசாக வெற்றிகொள்வதற்கு இரண்டு அதிர்ஷ்டசாலிகளுக்கு வாய்ப்புள்ளது. நெஸ்டமோல்ற்று 400 கிராம் பக்கட் (Bag-in-Box) அல்லது Super pack பக்கட்டின் மேலுறையுடன் தமது பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட்டு, 'Nestomalt Ran Ratha Wasana' என அடையாளமிட்டு, தபால் பெட்டி இலக்கம் 1720 இற்கு அனுப்பி வைப்பதன் மூலமாக நுகர்வோர் இந்த அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பங்குபற்ற முடியும். நெஸ்டமோல்ற்றினால் நடாத்தப்படும் இந்த ஊக்குவிப்புப் போட்டியானது வருமான அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நெஸ்லே நிறுவனத்தின் பான வகை உற்பத்திப் பிரிவின் பிரதித் தலைமை அதிகாரியான நோர்மன் கன்னங்கர அவர்கள் கூறுகையில், “வலிமை, ஆற்றல் மற்றும் சக்தி ஆகியவற்றின் நேர்த்தியான கலவையான நெஸ்டமோல்ற்று, கடந்த காலங்களில் பல்வேறுபட்ட ஊக்குவிப்புக்கள் மற்றும் வர்த்தகப் பிரச்சார முன்னெடுப்புக்களின் துணையுடன் இலங்கை நுகர்வோரின் உள்ளங்களையும், எண்ணங்களையும் வென்றுள்ளது. நாம் முன்னெடுத்துள்ள Ran Ratha Wasana பிரச்சாரமானது, வர்த்தகநாமத்தின் மீது எமது நுகர்வோர் வைத்துள்ள விசுவாசம் மற்றும் மிகுந்த ஆர்வமூட்டும் இப்பிரச்சாரத்தில் அவர்கள் உற்சாகத்துடன் பங்குபற்றுகின்றமைக்கு சன்மானமளிப்பதற்கு எமக்கு வாய்ப்பளித்துள்ளது,” என்று குறிப்பிட்டார்.

'வலிமை, ஆற்றல் மற்றும் சக்தி' ஆகியவற்றுக்குப் பெயர்பெற்ற நெஸ்டமோல்ற்று, நாடெங்கிலுமுள்ள குடும்பங்கள் வாழ்வில் வெற்றியை ஈட்டி, தேசத்தை வலுப்படுத்தும் வகையில் அவர்களை ஊக்குவிப்பதற்காக Ran Wan Sri Lanka பிரச்சார ஊக்குவிப்பிற்கு இணையாக இந்த Ran Ratha Wasana பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையில் அனைவராலும் நேசிக்கப்படுகின்ற, தனிச்சிறப்பு மிக்க மோல்ற்று அடங்கிய உணவுப் பான வகையான நெஸ்டமோல்ற்று, நீண்ட காலமாக இளம் வயதினர் மற்றும் வளர்ந்தவர்கள் என அனைவருக்கும் ஊட்டச்சத்தை வழங்கிவந்துள்ளது. பிரத்தியேகமாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெஸ்டமோல்ற்று, பொற்செழுமை மிக்க மோல்ற்று மற்றும் பாலின் நலச்செழுமையுடன் 'வலிமை, ஆற்றல் மற்றும் சக்தி' ஆகியவற்றை தொடர்ந்தும் வழங்கி வருவதுடன், அதன் மூலமாக எங்கும் தனது நுகர்வோரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி வருகின்றது.